**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீட்டு எண்**: 70/2025 **நாள்:** 10.06.2025

**செய்திக்குறிப்பு**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 13.09.2024 - ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்: 13/2024 இல் அறிவிக்கப்பட்ட அரசு உதவி வழக்கு நடத்துநர் , நிலை - II பதவிக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு, முதன்மை எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் / ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. சரிபார்ப்பிற்குப் பின்னர், சில சான்றிதழ்கள்/ ஆவணங்கள் முழுமையாக / சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் / குறைபாட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய தேர்வர்கள் **16.06.2025 வரை (இரவு 11.59 மணிக்குள்)** விடுபட்ட மற்றும் முழுமையான சான்றிதழ்களை / ஆவணங்களைப் பதிவேற்றம் / மீள் பதிவேற்றம் செய்ய இறுதி வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேற்படி தேர்வர்களின் பதிவெண்களைக் கொண்ட இரண்டாவது பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது . இது தொடர்பான குறிப்பாணை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல், அத்தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தேர்வர்கள் அனைவரும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை/ ஆவணங்களை தேர்வாணைய இணையதளத்தில் ஒருமுறை பதிவின் (OTR) வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், அத்தகைய தேர்வர்களின் உரிமை கோரல் (claim) / விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அ. ஜான்லூயிஸ், இ.ஆ.ப.,

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்